Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Culture in Tamil Literature

**Dr.P.Ramani,** Assistant Professor, Department of Tamil, Pishopkaldvel college, Tuticorn, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-0122-2900**
**DOI: 10.5281/zenodo.6622602**

## Abstract

*Culture is a projection of the morality and civilization of a society. There will be certain in every civilization. Tamils have distinct cultural heritage and have risen in both. The culture of Tamils is very special. Tamil cultures are innumerable and are practiced in many forms. The idea that the Tamil people are rich in culture is prevalent among all people. Although there are thousands of languages and thousands of literature, Tamil language, and Tamil literature have their own unique characteristics. The idea of the article is to bring the rich cultural tradition of the Tamils with reference to the literature.*

**Keywords:** Culture, Tamil, Literature, Life.

## References

[1] Ilampooranar. *Tolkappiyam Porulathikaram.* Tirunelveli Thenindiya Saiva Siddantha Noorpathippu Kazhagam Limited, Chennai - 18, 2006.
[2] Thirugnanasambanthar. *Purapporul Venppamalai.* Kathir Publishing, Thiruvaiyaru. 2006.
[3] Mohanarasu Ku. *Thirukkural Makkal Urai*, Ulaga thirukkural Maiyyam, Chennai – 5, 2005.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்

*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்*



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# தமிழ் இலக்கியங்களில் பண்பாடு

**முனைவர் பே. ரமணி,** உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை,

பிஷப் கால்டுவெல் கல்லூரி, தூத்துக்குடி, தமிழ்நாடு, இந்தியா.

ORCiD: https://orcid.org/0000-0003-0122-2900

**DOI: 10.5281/zenodo.6622602**

**ஆய்வுச்சுருக்கம்**

*பண்பாடு எனப்படுவது பயிரிடுகின்ற நிலத்தை உழுது பண்படுத்துவது போல மக்கள் தன் வாழ்க்கையினை நெறிப்படுத்துவதாகும். தமிழ் இலக்கியங்கள் தமிழர்களின் உயர்ந்த வாழ்க்கை பற்றிய உண்மைப் பதிவேடாகும். இவை ஒப்பில்லாத உயர்ந்த இலக்கியமாகவும் வாழ்வை9; பிரதிபலிக்கும் கண்ணாடியாகவும் விளங்குகின்றன. தமிழர்களின் வாழ்க்கை நிலையை பண்பாட்டை தமிழ் இலக்கியங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. உலகம் நல்ல வழியில் இயங்குவதற்கு பண்பாடு இன்றியமையாதது. அதுமட்டுமன்றி பண்புடையவர்கள் வாழ்த்தும் இன்றியமையாதது.*

**திறவுச்சொற்கள்:** பண்பாடு, தமிழ், இலக்கியம், வாழ்வு

**முன்னுரை**

பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம் நாகரீகம் என்பது திருந்திய வாழ்க்கை. நாகரிகம் சேர்ந்த பண்பாடுண்டு. நாகரீகம் இல்லாத பண்பாடுமுண்டு தமிழரின் பண்பாடுகள் இவ்விரண்டிலும் உயர்ந்து. தமிழர்களின் பண்பாடுகள; அனைத்தும் மிகச் சிறப்பு வாய்ந்தவையாகும். தமிழ்ப் பண்பாடுகள் எண்ணிலடங்காதது. தமிழ் மக்கள் என்றாலே பண்பாடு நிறைந்தவர்கள் என்ற எண்ணம் அனைத்து மக்களிடமும் அதிகளவு உள்ளன. பல்லாயிரம் மொழிகள் இருந்தாலும் பல்லாயிரம் இலக்கியங்கள் இருந்தாலும் தமிழ் மொழியும் தமிழ் இலக்கியங்களும் தனக்கென தனிப்பண்பாடுகளைக் கொண்டு விளங்குகிறது.

**தமிழ் இலக்கியங்களில் பண்பாடு**

பண்பாடு எனப்படுவது பயிரிடுகின்ற நிலத்தை உழுது பண்படுத்துவது போல மக்கள் தன் வாழ்க்கையினை நெறிப்படுத்துவதாகும். தமிழ் இலக்கியங்கள் தமிழர்களின் உயர்ந்த வாழ்க்கை பற்றிய உண்மைப் பதிவேடாகும். இவை ஒப்பில்லாத உயர்ந்த இலக்கியமாகவும் வாழ்வைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவும் விளங்குகின்றன. தமிழர்களின் வாழ்க்கை நிலையை பண்பாட்டை தமிழ; இலக்கியங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. உலகம் நல்ல வழியில் இயங்குவதற்கு பண்பாடு இன்றியமையாதது. அதுமட்டுமன்றி பண்புடையவர்கள் வாழ்த்தும் இன்றியமையாதது.

**"பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்" (திருக்குறள் – 996)**

என்பது வள்ளுவர் வாய்மொழி. அன்பும் அறனும் பரவிப் பெருகி வாழும் வாழ்வே பண்பும் பயனுமாக விளங்கும் வாழ்வாகும். அறத்தின் வழி வாழுதல் தமிழர் பண்பாடாகும். இதனை வள்ளுவர்

**"அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல்**
**நான்கும் இழுக்கா இயன்றது அறம்." (திருக்குறள் – 35)**

என்று உலகுக்கு எடுத்துக்காட்டுகிறார்.

**புறநானூற்றில் பகுத்துண்ணும் பண்பாடு**

பழந்தமிழர்கள் பகுத்து உண்ணும் பண்பைப் பெற்றிருந்தனர். தனக்குக் கிடைத்த உணவு எதுவாக இருந்தாலும் அதைப் பகர்ந்து உண்ணுவதால் சிறப்புப் பெற்றிருந்தனர்.

**உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்**
**அமிழ்தம் இயைவ தாயினும் இனிது எனத்**
**தமியர் உண்டலும் இலரே முனிவிலர்;**
**துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்**
**புகழ்எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்**
**உலகுடன் பெறினும் கொள்ளலர்:அயர்விலர்; (புறநானூறு 182)**

தமக்காக உழைக்காமல் பிறருக்காக பெரிய முயற்சியுடன் உழைப்பவர்கள் இந்திரனுக்குரிய அமிர்தம் கிடைத்தாலும் அஃது உயிர;fhப்பது என்பதற்காக தனித்து உண்ண மாட்டார்கள். சோம்பலறன்றிச் செயல்படுவார்கள். பிறர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சுவார்கள். புகழ் வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பார்கள். உலகம் முழுவதும் கிடைப்பதியிருந்தாலும் பழிவரும் செயல்களைச் செய்ய மாட்டார்கள். எதற்கும் மனம் தளர மாட்டார்கள். இத்தகைய சிறப்புடையோர் இருப்பதால் தான் இவ்வுலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது. இப்பாடல் சமூக நலத்தை முதன்மைப்படுத்துவதை அறியமுடிகிறது. இத்தகைய அறநோக்கு உடையவர்களாக தமிழர்கள் இருந்திருக்கின்றனர் என்பதைப் புறநானூற்றுப் பாடல் புலப்படுத்துகின்றது.

**வீரம் என்னும் பண்பாடு**

ஆண்மை நிறைந்தவன் தமிழன் அந்நாளில் அவன் வாளாண்மையால் பகைவரை வென்று வீரம் என்னும் பண்பாட்டில் சிறந்து விளங்கினான். இதற்கு புறநானூறு நூலே சான்றாக அமைகின்றது. புறமுதுகிட்டு ஓடுவதும் புறமுதுகில் அம்பு பட்டு வீழ்ந்து போவதும் அவமானம் எனக் கருதினர். போரில் அடிபட்டு மாண்டு போன தன் மகன் இறந்த செய்தி அறிந்து ஒரு வீரத்தாய் போர்க்களம் நோக்கி நடக்கிறாள்;. அப்போது அவன் இறந்து போன என் மகன் நெஞ்சிலே அம்பு பட்டு இறந்திருக்க வேண்டும். ஒருவேளை புறமுதுகு காட்டி இறந்து போயிருந்தால் அவன் பால் குடித்த மார்பகங்களை அறுத்தெறிவேன் என்று சபதம் செய்கிறாள். போர்க்களத்திலே மகன் நெஞ்சிலே அம்பு பட்டு மாண்டு கிடக்கிறான். அவனை ஆரத்தழுவி அழுகின்றாள் அந்த வீரத்தாய் அதுமட்டுமின்றி அந்த மகனின் பிணத்தைப் பார்த்து ஈன்ற பொழுது அடைந்ததை விட பெருமகிழ்ச்சி அடைகிறாள். தந்தையை இழந்த கணவனை இழந்து இறுதியாய் தனக்கு உதவியாக இருக்கும் ஒரே மகனயும் போர்க்களத்திற்கு அனுப்பி வைத்த ஒரு வீரத்தாயும் புறநானூற்றிலே காணப்படுகிறாள். மற்றொரு தாய் தன் வயிறு புலி தங்கிச் சென்ற குகை என்று வீரத்தை வெளிப்படுத்துகிறாள்.

**"சிற்றில் நற்றூண் பற்றி நின் மகன்**
**யாண்டுளன் என வினவுதி என்மகன்**
**யாண்டுளன் ஆயினும் அறியேன். ஓரும்**
**புலி சேர்ந்து போகிய கல்லளை போல**
**ஈன்ற வயிறோ இதுவே**
**தோன்றுவது யாதோ போர்க்களத்தானே" (புறநானூறு – 86)**

இப்பாடல் தன் மகன் போர்க்களத்தில்தான் இருப்பான் என மகனின் வீரம் நிறைந்த போர்க் குணத்தை வெளிப்படுத்துகிறாள்.

போர் செய்வதிலும் பண்பாட்டை வலியுறுத்துவதை புறநானூற்றில் காண முடிகிறது.

**"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்**

**பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்**

**தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**

**பொன்போல் புதல்வர் பெறாஅ தீரும்**

**எம் அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின்." (புறநானூறு – 9)**

என்ற பாடல் பகையரானாக இருந்தாலும் முன்னறிவிப்பு செய்து போரால் இடையூறு ஏற்படா வண்ணம் பார்த்துக் கொண்டதை அறிய முடிகிறது. பசுக்கள் மட்டுமல்லாது பெண்கள் குழந்தைகள் அந்தணர் முன்னோர் வழிபாடு செய்வோர் புதல்வரைப் பெறாதவர்கள் அனைவரும் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லும்படி அறிவுறுத்திய பின்னரே போர் தொடங்குவதை அறிய முடிகிறது. உலகம் போற்றிய தமிழ்ப் பண்பாடு இதுவே. இவர்கள் வீரத்தைப் பார்க்கின்ற பொழுது தன்மானம் நாட்டுப்பற்று போன்ற உயர்பண்புகளின் உருவமாக வாழ்வதை அறியமுடிகிறது.

**விருந்தோம்பும் பண்பாடு**

தமிழரின் தலைசிறந்த பண்பாடுகளில் ஒன்று விருந்தோம்பல். வீட்டிற்கு வரும் விருந்தினர்களை நன்கு உபசரித்து அனுப்புவது தமிழரின் பண்பாடாகும். இது அனைவரும் அறிந்த ஒன்று. வீடு தேடி வருபவர்களுக்கு இல்லை என்று கூறாமல் உடனே உணவளிக்கும் பழக்கத்தினை மேற்கொண்டவர்கள் தமிழர்கள். சங்ககால மகளிரின் மனையற மாண்புகளில் முதன்மையானதாக விருந்தோம்பல் வைக்கப்பட்டுள்ளது. இது குடும்பத் தலைவியின் கடமைகளில் ஒன்றாகக் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. விருந்தோம்பலை இல்லத்தரசியின் கடமையாக வேறு எந்த இனமும் நாடும் சுட்டிக் காட்டவில்லை. இதனை தமிழ் இலக்கியங்களில் காண முடிகிறது. விருந்து என்னும் சொல்லுக்குப் 'புதுமை' என்ற பொருண்மையைத் தொல்காப்பியர் சுட்டுகிறார்.

**"விருந்தே தானும்**

**புதுவது புனைந்த யாப்பின் மேற்றே" (தொல்காப்பியம் செய்யுள் – 231)**

தலைவன் தலைவியின் காதல் பெற்றோர்களால் மறுக்கப்பட்ட நிலையில் தலைவன் தலைவியை உடன்கொண்டு போதல் இயல்பு. அத்தகைய உடன் போக்கின் போது இருவரும் விருந்தினராகக் கவனிக்கப்படும் நிலை அகஇலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனை

**"கல்கெழு சிறப்பின் நம்மூர்**

**ஏவ்விருந்தாகிப் புகுகம் நாமே" (ஐங்குறுநூறு – 396)**

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலில் அறிய முடிகிறது. விருந்தினராகச் சற்று இளைப்பாறிச் சொல்வோம் என்ற தலைவன் கூறுகிறான். இதன் மூலம் வழிநடை வருத்தம் தீர வழிச் செல்வோருக்கு சங்க கால மக்கள் விருந்தோம்பிய பங்கு புலனாகிறது.

**முடிவுரை**

உலகிற்கே பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் சொல்லிக் கொடுத்த பெருமை தமிழரையும், தமிழ் இலக்கியங்களையும் சாரும். ஒருவன் அறிவு வளர்ச்சி மற்றவர்களை சென்றடையும் போது அவனது பண்பாடும் பரந்து விரிகிறது. தமிழ் இலக்கியங்கள் பண்பாட்டு விருமியங்களின் கருவூலமாகத்

திகழ்கின்றன. சங்கத் தமிழர்கள் பண்பாட்டை தன் உயிரினும் மேலாகப் மதித்துப் போற்றியுள்ளனர். என்பதை தமிழ் இலக்கியங்கள் பறை சாற்றுகின்றனர்.

**துணைநூற்பட்டியல்**

[1] இளம்பூரணர் (உ.ஆ). *தொல்காப்பியம் பொருளதிகாரம்*. திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட், சென்னை – 18, 2006.

[2] திருஞானசம்பந்தர். *புறப்பொருள் வெண்பாமாலை*. கதிர் பதிப்பகம், திருவையாறு, 2006.

[3] மோகனராசு கு. *திருக்குறள் மக்கள் உரை*. உலகத் திருக்குறள் மையம், சென்னை – 600005, 2005.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.